# திரும்புங்கள், திரும்புங்கள்;
## நீங்கள் ஏன் சாகவேண்டும்?

பரிசுத்த வேதத்தை முதலிலிருந்து கடைசிவரைக்கும் வாசித்தால், ஞானமாகிய பெரிய பாக்கியத்தைப் பெறவிரும்புகிறவர்கள் எல்லாரையும், வந்து பெற்றுக்கொள்ளுங்களென்று தேவன் அழைக்கிற ஓர் விசேஷத்தை அதிற் காணலாம். "ஓ! தாகமாயிருக்கிறவர்களே நீங்கள் எல்லாரும் தண்ணீர்களண்டைக்கு வாருங்கள்; பணமில்லாதவர்களே நீங்கள் வந்து வாங்கிச் சாப்பிடுங்கள்; நீங்கள் வந்து பணமுமின்றி விலையுமின்றித் திராட்சரசமும் பாலுங் கொள்ளுங்கள்." ஏசா. 55: 1. இப்படியே தேவன் நம்மெல்லாரையும் அழைத்து, ஓர் சாத்திரமான கேள்வியைக் கேட்கிறார். அதாவது: "நீங்கள் அப்பமல்லாததற்காகப் பணத்தையும், திருப்திசெய்யாத பொருளுக்காக உங்கள் பிரயாசத்தையும் செலவழிப்பானேன்; நீங்கள் எனக்குக் கவனமாய்ச்செவிகொடுத்து, நலமானதைச்சாப்பிடுங்கள்; அப்பொழுது உங்கள் ஆத்துமா கொழுப்பான பதார்த்தத்தினால் மகிழ்ச்சியாகும்."

நாம் இவ்வுலக இன்பங்களைப் பெறும்படி மிகவும்பிரயாசப்பட்டு உழைக்கிறோம். ஆகில் இப்பிரபஞ்சத்தின் மேன்மையான நோக்கத்தைப் பார்த்தால் அதுவும்மாயைதான். "மாயை, மாயை, எல்லாம் மாயை என்று பிரசங்கிசொல்லுகிறான். சூரியனுக்குக்கீழே மனுஷன் படுகிற எல்லாப்பிரயாசத்தினாலும் அவனுக்குப் பலன் என்ன?" பிர. 1: 2, 3.

இங்கே நம்பக்கூடியதும் திருப்தி கொடுக்கக்கூடியதும் நிலைநிற்கிறதுமான யாதொன்றுமில்லை. எங்கள் ஆத்துமா இவ்வுலகம் கொடுக்கக்கூடாத ஓர் ஒதுக்கிடத்துக்கு ஆசைப்படுகிறது. அதைத் தேவன் எங்களுக்குக்கொடுக்கக்கூடியவராய்மாத்திரமல்ல, அதைக் கொடுக்க விரும்புகிறவராயுமிருக்கிறார். நாம் அதைப் பெற்றுக்கொள்ளும்படிக்கு ஆசையோடு நம்மைஅழைக்கிறார். "ஆவியும் மணவாட்டியும் வா என்கிறார்கள்; கேட்கிறவனும் வா என்பானாக; தாகமாயிருக்கிறவன் வரக்கடவன்; விருப்பமுள்ளவன் ஜீவத்தண்ணீரை இலவசமாய் வாங்கிக்கொள்ளக்கடவன்." வெளி. 22: 17.

தேவன் இவ்வளவாய்த் திருவுளம்கொண்டு நம்மை அழைக்க நாம் பின்னிற்கிறது பயித்தியமாய்மாத்திரம

லை, ஆபத்துக்கிடமாயிருக்கிறது. அதனால், நாம் இலேசாய் அநுபவிக்கக்கூடிய பெரிய சலாக்கியங்களைப் பெறாமலிருக்கிறதும், மோசத்திலிருந்து விலக்கக்கூடிய சர்வவல்லமையுள்ள தேவனுடைய கிருபையை இழந்துபோகிறதும் மாத்திரமல்ல, எங்கள் பாவங்களினால் வரவேண்டிய பெரிய பயங்கரமான தண்டனையை விலக்கிக்கொள்ளவும் பின்னிற்கிறோம்.

நாம் எல்லாரும் பாவிகளாயிருக்கிறோம். "நமக்குப் பாவம் இல்லையென்போமானால் நம்மை நாமே வஞ்சிக்கிறவர்களாயிருப்போம்." 1 யோவா. 1: 8. நாம் பாவஞ்செய்து ஆக்கினைத்தீர்ப்புக்காட்களானோம். பாவத்தினால் வரும் தண்டனை, நாம் எள்ளளவும் நினைக்கக்கூடாத அவ்வளவு பெரிதாயிருக்குமென்பது நிச்சயம். நாம் இதைப்பற்றிக் கவனித்தாலும் சரி கவனியாமல் விட்டாலும் சரி, பாவிகளாய் இருப்பதாற் பாவத்தின் பலனைப் பெற்றுக்கொள்ள வேண்டும். அதைக் குறைத்துக் கொள்ளக்கூடிய வழிவகைகளில்லை. எப்படியெனில், பாவத்தை முழுவதும் வெறுக்கிறவரும் உன்னதமும் பரிசுத்தமுமுள்ளவராயிருக்கிறவருமான தேவன் எங்களுக்குத் தீர்ப்புச்செய்கிறவராயிருக்க, நாம் போக்குச்சொல்லவும் அவரை வஞ்சிக்கவும் அவருடைய தீர்ப்பை மாற்றும்படி வேறொரு நியாயாதிபதிக்கு அபையமிடவும் எங்களுக்கு இடமில்லை. தேவன் மிகவும் இரக்கமுள்ளவராயினும் குற்றவாளியைக் குற்றமற்றவனாகப்போகவிடார். ஆகையால் நாம் பயங்கரமான இக் காரியத்தைச் சிறிதும் கவனியாமலிருத்தலும் அதிற் தவறிப்போகிறதும் ஆகாது.

தேவனுடைய இரக்கம் இன்னமாதிரி என்று ஓர் கோட்பாட்டை உண்டாக்குகிறது எளிது. ஆனால் எங்கள் யோசனைகளாற் தேவனுடைய சித்தத்தை மாற்றக்கூடாதென்பது நிச்சயமாகையால் ஆதாரமில்லாத கோட்பாடுகளிற் தங்கியிருத்தல் புத்தியுமல்லப் பேணுதலுமல்ல. சமாதானமில்லாதபோது, சமாதானம், சமாதானம் என்று சொல்லலாமா? "துன்மார்க்கரோ கொந்தளிக்குங் கடலைப்போலிருக்கிறார்கள். அது அமர்ந்திருக்கக்கூடாமல், அதின் சலங்கள் சேற்றையும் அழுக்கையும் கரையில் ஒதுக்குகிறது. துன்மார்க்கருக்குச் சமாதானம் இல்லையென்று என் தேவன் சொல்லுகிறார்." ஏசா. 57: 19-21.

ஆகையாற் சகோதரர்களே, நாம் இரட்சிக்கப்படும்படி எங்கள் எண்ணம் போனவழி தேடிக்கொண்ட பாதைகளை விட்டு, தேவன் காண்பிக்கிற பாதைகளில் முழுமனதோடும் நடப்போமாக. அவர் பாவத்தை வெறுத்தாலும், பாவம் செய்கிறவன் சாகாமல் இரட்சிக்கப்பட விரும்புகிறார். "கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறது என்னவென்றால்: நான் துன்மார்க்கனுடைய மரணத்தை விரும்பாமல், துன்மார்க்கன் தன் வழியைவிட்டுத் திரும்பிப் பிழைப்பதையே விரும்புகிறேன். * * உங்கள் பொல்லாத வழிகளைவிட்டுத் திரும்புங்கள்; நீங்கள் ஏன் சாகவேண்டும்." எசே. 33: 11.

நாம் அவரைத் தேடிப்போகும் வரைக்கும் அவர் காத்திராமல், நாம் அவரை நினையாதிருக்கிறபோதும் நம்மேலிரங்கி நம்மை அழைத்துக்கொள்ளுகிறார். "நாம் தேவனிடத்தில் அன்புகூர்ந்ததினால் அல்ல, அவர் நம்மிடத்தில் அன்புகூர்ந்து, நம்முடைய பாவங்களை நிவிர்த்திசெய்கிற கிருபாதார பலியாகத் தம்முடைய குமாரனை அனுப்பினதினாலே அன்பு உண்டாயிருக்கிறது." 1 யோவா. 4: 10. நாம் பாவிகளாயிருக்கையிற் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப்பண்ணுகிறார்." ரோமர். 5: 8. நாங்கள் பாவத்திலிருந்து மீளும்படி இப்படிப்பட்ட பெரியவிலை கொடுக்கப்பட்டிருக்க, பாவத்தில் இன்னும் நாம் நிற்கிறது ஆச்சரியமான மதியீனம். அந்த விலை என்னவென்றால், குற்றமில்லாத மாசற்ற ஆட்டுக்குட்டியாகிய கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற ரத்தம்தான்.

ஒருபக்கத்திலே மனுஷர் தங்கள் பாவத்தினால் மிகவும் வருத்தப்பட்டாலும் அதைக் கைவிடாதிருக்கிறதையும், மற்றப்பக்கத்திலே அவர்களை இரட்சிக்கும்படிக்குப் பரிசுத்த இரட்சகர்தாமே தமது சீவனைக் கொடுக்கிறதையும் காணும்போது, தேவனுடைய இரட்சிப்பின் வழி எவ்வளவு ஆச்சரியமும்விரும்பத்தக்கதுமாய்த் தோன்றுகின்றது. அது உத்தமவழியாயும் நம்மை இரட்சிக்கக்கூடிய ஒரே ஒருவழியாயும் இருப்பதால், நாம் வேறுவழியை விரும்புகிறது மிகவும் புத்தியீனம்.

தேவன் காண்பிக்கிற வழியில் நடந்தால் எல்லாரும் இரட்சிக்கப்படக்கூடும். அதிலே பிரவேசிக்கக்கூடாத ஒருவனுமில்லை. "தேவன் தம்முடைய ஒரேபே

றான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்." யோவா. 3: 16. இவ்விதமாய் இரட்சிப்பைப் பெறுகிறதைப்பார்க்கிலும் வேறு லேசானதும் எல்லாருக்கும் பொருத்தமானதுமான வகை இருக்கக்கூடாது. அதற்கு ஒரே ஒரு காரியம் எங்களிடம் வேண்டப்படுகின்றது, அதாவது விசுவாசம். ஆகையால் இரட்சிப்பைப்பெறுகிறது இலேசு. அதை மறுக்கிறது எவ்வளவு பயங்கரம்! "குமாரனிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் நித்திய ஜீவனையுடையவனாயிருக்கிறான்; குமாரனைவிசுவாசியாதவனோ ஜீவனைக் காண்பதில்லை, தேவனுடைய கோபம் அவன்மேல் நிலைநிற்கும்."

தேவனுடைய இரட்சிப்பைப் பெற உடன்படாதிருத்தல் மடமையும் தீங்குமாய் மாத்திரமல்ல அது பாவமாயுமிருக்கிறது. கலகக்காரன் மன்னிப்பை வேண்டாமென்று மறுத்தால் அவனுடையகுற்றம் பெரிதாகமாட்டாதா? அப்படியே எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படவேண்டுமென்னும் தேவசித்தத்தை நாம் எதிர்த்தால் குற்றமில்லாதவர்களாயிருக்கலாமா? "பேசுகிறவருக்கு நீங்கள் செவிகொடுக்கமாட்டோமென்று விலகாதபடி எச்சரிக்கையாயிருங்கள். ஏனெனில், பூமியிலே பேசினவருக்குச் செவிகொடுக்கமாட்டோமென்று விலகினவர்கள் தப்பிப்போகாமலிருக்க, பரலோகத்திலிருந்துபேசுகிறவரை நாம் விட்டுவிலகினால் எப்படித் தப்பிப்போவோம்" என்றும்; "இவ்வளவு பெரிதான இரட்சிப்பைக்குறித்து நாம் கவலையற்றிருப்போமானால் தண்டனைக்கு எப்படித் தப்பித்துக்கொள்ளுவோம்"என்றும் சொல்லப்பட்டிருக்கின்றது. எபி. 12: 25; 2: 4.

ஆகையால் இரட்சிப்பை மறுக்கிறது எவ்வளவு பயங்கரமாயும், இரட்சிப்பைப் பெறுகிறதோ எவ்வளவு ஆசீர்வாதமாயும் இருக்கிறதென்று நினைத்தல்வேண்டும். தேவன் இம்மையில் நம்மெல்லாருக்கும் சந்தோஷத்தையும் சமாதானத்தையும் ஆறுதலையும், மறுமையில் நித்தியஜீவனையும், கொடுக்க மனமாயிருக்கிறார்.

---

Published by the Jaffna Religious Tract Society.
Strong and Asbury Printers, Manippay.
First Edition 5,000